சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை – 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் 500 சக்கரங்கள் இலவசமாக வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை

அரசாணை (நிலை) எண்.502 **நாள்: 02.09.2010.**

ஆவணி 17,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்க:–

1. செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், கடிதம் எண் எம்3/2103/2010, நாள் 12.05.2010
2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண் டி1/25238/10, நாள் 18.05.2010
3. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண் டபிள்யு1/33574/2010, நாள் 08.07.2010

ஆணை:

2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினையும் வெளியிட்டார்கள்.

"மண்பாண்டத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைத்து இந்த அரசு பல்வேறு நல உதவிகளை அளித்து வருகிறது. இத்தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் 500 சக்கரங்கள் (Potter's Wheel) இலவசமாக வழங்கப்படும் ."

2. மேலே 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட கடிதங்களின் அடிப்படையில், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் 01.09.2006 முதல் தனிவாரியமாக செயல்பட்டு வருகிறது என்றும், இவ்வாரியத்தில் 30.06.2010 வரை 17,504 மண்பாண்டத் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். எனவும் இவ்வாரியத்தில் கல்வி, மகப்பேறு, திருமணம், கண்கண்ணாடி வாங்க உதவித் தொகை, இயற்கை மரணம் / ஈமச்சடங்கு, விபத்து மரணம் /விபத்து ஊனம் மற்றும் ஓய்வூதியம் போன்ற உதவித் தொகைகள் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தொழிலை மேம்படுத்திட தொழில் சம்பந்தமான மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் சக்கரம் வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டதன் அடிப்படையில், ஒரு மின்சக்கரத்தின் விலை ரூ.3,500/– என கணக்கிடப்பட்டு 2010–2011 ஆம் ஆண்டிற்கு 500

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.17,50,000/– செலவாகும் எனவும் மேற்குறிப்பிட்ட கருவியை வாங்கி இலவசமாக கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பயனாளிகளுக்கு வழங்கலாம் எனவும்

1.வாரியத்தில் ஓராண்டு காலம் பதிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

2.சக்கரம் வழங்கும் தினத்தன்று வாரியத்தில் குறிப்பிட்ட தொழிலில் பதிவு பெற்ற தொழிலாளியாக இருக்க வேண்டும்.

3.ஏற்கனவே சொந்தமாக சக்கரம் வைத்துள்ளவராக இருத்தல் கூடாது.

எனவே, தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு 2010–2011 ஆம் ஆண்டில் பதிவு செய்த 500 தொழிலாளர்களுக்கு மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் சக்கரம் வழங்க ரூ.17,50,000/– நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 2–ல் காணும் தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு உதவும் வகையில், மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் 500 சக்கரங்கள் வாங்கி இலவசமாக கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பயனாளிகளுக்கு வழங்குவதற்கும்:-

(i) வாரியத்தில் ஓராண்டு காலம் பதிவு பெற்றவராக இருக்க வேண்டும்.
(ii) சக்கரம் வழங்கும் தினத்தன்று வாரியத்தில் குறிப்பிட்ட தொழிலில் பதிவு பெற்ற தொழிலாளியாக இருக்க வேண்டும்.
(iii) ஏற்கனவே சொந்தமாக சக்கரம் வைத்துள்ளவராக இருத்தல் கூடாது.
(iv) இதன் பொருட்டு ஒரு மின்சக்கரத்தின் விலை ரூ.3500/– வீதம் 500 மின்சக்கரத்திற்கான செலவுத் தொகையான ரூ.17,50,000/–ஐ (ரூபாய் பதினேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் செயல்பாட்டிற்காக 2010–2011ஆம் ஆண்டிற்கு அரசாணை (நிலை) எண் 109, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 29.06.2010–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையிலிருந்து செலவிட்டுக் கொள்வதற்கும் தொழிலாளர் ஆணையருக்கு அனுமதி அளித்தும்,
(v) மேலே பத்தி 3(iv)இல் அனுமதிக்கப்பட்ட மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் 500 சக்கரங்கள் வாங்கும் போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தப் புள்ளி வழிமுறைகளை பின்பற்றப்படவேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4.இவ்வாளை நிதித் துறையில் அ.சா.எண் 48670/L&D/10, நாள் 26.08.2010இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி)

த.பிரபாகர ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர்

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.

செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்,
சென்னை – 600 102.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 600 035

மாநிலக் கணக்காயர் (கணக்குகள்), சென்னை – 600 018

மாநிலக் கணக்காயர் (கணக்குகள்), சென்னை – 600 018 (பெயரில்)

மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை – 600 018

மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை – 600 018 (பெயரில்)

மாநிலக் கணக்காயர் (உள்தணிக்கைப் பிரிவு), சென்னை – 600 009

செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 102

நகல்

நிதித் துறை, சென்னை – 600 009

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 600 009.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.

அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை – 600 009.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அ.ந.மு–II) (எப்)துறை, சென்னை–600 009.

சுத்த நகல் கோப்பிற்கு இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.